1987 மார்ச் 2]

நெடுஞ்சாலை கண்காணிப்புப் பொறியாளர்களின் அலுவலகம்.

14—(*வினா எண். 10593) திருமதி. பா. வளர்மதி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்புப் பொறியாளர்களின் அலுவலகங்களை அந்தந்த பிராந்தியங்களிலேயே அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தைப் பொறுத்தமட்டில், நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்புப் பொறியாளர்களின் அலுவலகங்கள் அந்தந்த பிராந்தியங்களில் ஏற்கனவே அமைக்கப் பட்டுள்ளன.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் வேலைப்பளுவை கணக்கில்கொண்டு, கண்காணிப்புப் பொறியாளர்களின் எண்ணிக்கையை அரசு அதிகரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, புதிதாக பிரிக்கப்பட்ட காரணத்தினால் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு வேலை அதிகம் வரும் என்று நாம் சொல்ல முடியாது. காரணம், ஏற்கனவே எந்தப் பரப்பளவு மொத்தமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்களோ, அதே பரப்பளவுதான் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது நான்கு வட்டங்களாகப் பிரித்து நான்கு கண்காணிப்புப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். கோட்டங்கள்—ஒவ்வொரு வட்டத்திற்கும் 6 கோட்டங்கள் வீதம் 24 கோட்டங்கள் மொத்தமாக இருந்து கொண்டிருக்கின்றன. எனவே, மாவட்டங்களில் பிரச்சினை ஏற்படுகிறபோது, மாவட்டங்களிலே இருக்கின்ற அதிகாரிகளை அதிகப்படுத்துவதற்கு, தேவையான அளவுக்கு எண்ணிக்கையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு நெடுஞ்சாலைகளைக் கண்காணிக்க தமிழக அரசுக்குக் கொடுக்கும் நிதியுதவி எவ்வளவு என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, வட்டங்களையும், கோட்டங்களையும் கேட்டுவிட்டு, நிதியைப் பற்றிக் கேட்கும்போது, என்னிடத்திலே இங்கே அதற்கான குறிப்பு இல்லை. தனியாகவோ, அல்லது நேராகவோ கேட்டால் அந்தக் குறிப்பை நான் தருகிறேன்.

திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் நெடுஞ்சாலைத் துறை கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம் தற்போது திருநெல்வேலியில்தான் இருக்கிறது. இராமநாதபுரத்திற்கும், திருநெல்வேலிக்கும் கிட்டத்தட்ட 200 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. எனவே, கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய தலைநகரத்திற்குக் கொண்டு வரப்படுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அது ஏற்கனவே இருந்த இடத்திலே இருந்து இயங்குவதில் ஒரு பிரச்சினையும் இருக்காது. கண்காணிப்புப் பொறியாளர் வருகின்ற காரணத்தினால் பெரிய முன்னேற்றம் அடைந்துவிடும் என்று சொல்ல முடியாது. கண்காணிக்கக் கூடியவர்தான் அவர். எனவே, அந்தந்தப் பகுதிக்குச் சென்றுதான் அவர் கண் காணிக்க வேண்டும். கோட்டப் பொறியாளர் தேவை என்று கேட்கிறபோது நியாயம் இருக்கிறது. ஆனால், கண்காணிப்புப் பொறியாளர்கள் தனியாக அந்த இடத்திற்கு வருவது என்பது கடினமான காரியம்.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதியில் சிவகிரி தாலுகா இருக்கிறது. அதில் நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் இதுவரை இல்லை. ஆகவே, அங்கு ஒரு உதவி கோட்டப் பொறியாளர் அலுவலகம் அமைப்பதற்கு அரசிடம் ஆய்வில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏதோ ஒரு அலுவலகத்துடன் அது இணைந்து இருக்கும். எனவே, அது தனியாக அந்த இடத்திற்குத் தேவைதானா என்பதைப் பற்றி ஆய்வு செய்யலாம்.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் பொருள்களின் விலை.

19—(*வினா எண். 10310)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் தயாரிக்கும் பொருள்கள் தனியார் நிறுவனத்தின் உற்பத்தி பொருளைவிட விலை கூடுதலாக உள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?